5

# ஒரு கிறிஸ்தவர் செய்ய வேண்டிய "ஒரே" விஷயம்

## (பிலிப்பியர் 1:27–30)

*கிறிஸ்தவர் என்ற வகையில் நீங்கள் செய்யத் தேவையானவை என்ன என்று உங்களுக்குக் கூறும் பிரசங்கியார்கள் மற்றும் போதகர்கள் குறித்து நீங்கள் எப்போதாவது இளைப்படைந்து இருக்கிறீர்களா? தேவபக்தியுள்ள வாழ்வு வாழ்தல் மற்றவர்களுக்கு உதவுதல், தேவனை ஆராதித்தல் மற்றும் பிறருக்குப் போதித்தல் பற்றிய தொடர்ந்த அறிவுறுத்துதலைக் கவனித்துக் கேட்டதினால் நீங்கள் எப்போதாவது களைப்படைந்து இருக்கிறீர்களா? இயேசுவைப் பின்பற்றுவதற்குச் செய்ய வேண்டிய விஷயங்கள் ஒரு சில வார்த்தைகளில் தொகுத்துக் கூறப்பட முடியுமா என்று நீங்கள் எப்போதாவது விரும்பி இருக்கிறீர்களா? அப்படியானால் இருதயத்தைக் கொடுத்துக் கவனியுங்கள் - ஏனெனில் இதையே பவுல் பிலிப்பியர் 1:27ல் செய்தார்:*

> நான் வந்து உங்களைக் கண்டாலும், நான் வராமலிருந்தாலும், நீங்கள் ஒரே ஆவியிலே உறுதியாய் நின்று, ஒரே ஆத்துமாவினாலே சுவிசேஷத்தின் விசுவாசத்திற்காகக் கூடப்போராடி, எதிர்க்கிறவர்களால் ஒன்றிலும் மருளாதிருக்கிறீர்களென்று உங்களைக்குறித்து நான் கேள்விப்படும்படி, எவ்விதத்திலும் நீங்கள் கிறிஸ்துவின் சுவிசேஷத்திற்குப் பாத்திரராக மாத்திரம் நடந்துகொள்ளுங்கள்.

*Monon* என்பது, ''மாத்திரம்'' என்று இவ்வசனத்தில் மொழிபெயர்க்கப்பட்டுள்ள கிரேக்க வார்த்தையாக உள்ளது. இவ்வார்த்தை, "மாத்திரம், மட்டும் … வினைச்சொல்லினால் குறிப்பிடப்பட்ட செயலை அல்லது நிலையை வரயறைப்படுத்துகிற" என்று அர்த்தப்படுகிறது.[1] ஜெரால்டு ஹாவ்தார்ன் என்பவர் இவ்வார்த்தையை "மாத்திரம் மற்றும் எப்போதும்" என்று மொழிபெயர்த்து,[2] "பவுல், *monon* என்ற வினையுரிச் சொல்லுடன் இந்தப் புதிய பகுதியை அறிமுகப்படுத்துகிறார் … இவ்வாறு செய்வதில் அவர், கிறிஸ்துவின் சுவிசேஷத்திற்குப் பாத்திரராகக் கிறிஸ்தவர் வாழ்வதற்குச் செய்ய வேண்டிய 'அவசியமான ஒரு விஷயத்தை' வலியுறுத்துகிறார்" என்று விளக்கம் அளித்துள்ளார்.[3] வில்லியம் பார்க்ளே என்பவர், தமது மொழிபெயர்ப்பில் இவ்வார்த்தையை, "நீங்கள் [செய்யும்படி] கண்ணோக்கியாக வேண்டிய ஒரு விஷயம்" என்று விரித்துரைத்தார் மற்றும் அதன் பின்பு அவர் தமது குறிப்புகளில் பின்வரும் விளக்கத்தை உள்ளடக்கினார்: "என்ன நடந்தாலும் பரவாயில்லை - ஒரு விஷயம் அத்தியாவசியமாக உள்ளது … பிலிப்பியர்கள் தங்கள் விசுவாசம்

*மற்றும் அறிக்கையிடுதல் ஆகியவற்றிற்குத் தக்க வகையில் வாழ வேண்டும்."*[4]

*மற்ற எழுத்தாளர்கள் monon என்பது பற்றிய இந்தக் கண்ணோட்டத்துடன் கருத்து ஒருமைப்பட்டுள்ளனர். அலெக் மோட்யர் என்பவர், "பவுல், 'இந்த ஒரு விஷயம் மற்றும் இது மாத்திரமே' என்று கூறியிருப்பது போன்று, 'மாத்திரம்' என்ற வார்த்தையின் வலிவானது மிகப்பிரம்மாண்டமானதாக உள்ளது. வேறு எதுவும் அவர்களை இந்த மாபெரும் குறிக்கோளில் இருந்து தடம் மாற்றி விடவோ அல்லது சாக்குப்போக்குக் கூறவைத்துவிடவோ கூடாது; இது ஒன்றுதான் அவர்கள் விடாப்பிடியாகப் பற்றிக் கொண்டிருக்க வேண்டிய எல்லாமுமாக இருக்க வேண்டும் ..." என்று எழுதினார்.*[5] *சார்லஸ் ஏர்ட்மேன் என்பவர், "ஒரு கிறிஸ்தவரின் வாழ்வு 'கிறிஸ்துவின் சுவிசேஷத்திற்குப் பாத்திரமானதாக இருக்க வேண்டும் என்பதே, அவரது வாழ்வின் விதி அல்லது சட்டமாக இருக்க வேண்டும்' " என்று எழுதினார்.*[6]

*ஒரு கருத்துணர்வில் பவுல், கர்த்தரை உண்மையாகப் பின்பற்றுபவராக இருத்தலில் உள்ளடக்கப்பட்டுள்ளது எல்லாவற்றையும் எடுத்து அதைக் பின்வருமாறு சுருக்கியுரைத்தார் எனலாம்: ''நீங்கள் 'கிறிஸ்துவின் சுவிசேஷத்திற்குப் பாத்திரரான வகையில் நடந்து கொள்ளவேண்டும்' என்பதே நீங்கள் செய்ய வேண்டிய ஒரே விஷயமாக உள்ளது.'' ஆகையால் நாம், "அது மாபெரிது - இப்போது நான் இந்தப் பிரசங்கியார்கள் பேசுகிற மற்ற அவசியமான செயல்கள் யாவற்றைப் பற்றியும் கவலைப்படத் தேவையில்லை" என்று கூறலாமா? இல்லை. பவுலின் கூற்றானது அர்த்தம் பொதிந்ததாக உள்ளது, ஆனால் அவர் கூற விருப்ப நோக்கம் கொண்டிராத ஒன்றை அவர் கூறியதாக ஆக்க முயற்சி செய்யாதீர்கள்.*

*வேதவசனங்களில் அவ்வப்போது, தேவனுடைய பிள்ளை தமது பரலோக பிதாவிற்குச் செய்ய வேண்டிய பொறுப்புப் பற்றித் தொகுத்துரைக்கும் கூற்றுகள் கூறப்பட்டுள்ளன. எடுத்துக்காட்டாக, பழைய ஏற்பாட்டில் மீகா, ''நியாயஞ்செய்து, இரக்கத்தைச் சிநேகித்து, உன் தேவனுக்கு முன்பாக மனத்தாழ்மையாய் நடப்பதை அல்லாமல் வேறே என்னத்தைக் கர்த்தர் உன்னிடத்தில் கேட்கிறார்?" என்று எழுதினார் (மீகா 6:8). ஏவுதல் பெற்ற மீகாவின் கூற்று, இஸ்ரவேல் மக்கள், மோசேயின் நியாயப் பிரமாணத்தில், ரபீக்கள் அடையாளம் கண்டறிந்த அறுநூறுக்கும் சற்று அதிகமான பிரமாணங்களைப் பற்றி மறந்து விடமுடியும் என்று அர்த்தப்படுத்திற்றா? இல்லவே இல்லை. அந்தப் பிரமாணத்தைப் பற்றி இயேசு பேசுகையில் (மத்தேயு 5:17, 18), "ஆகையால், இந்தக் கற்பனைகள் எல்லாவற்றிலும் சிறிதானதொன்றையாகிலும் மீறி, அவ்விதமாய் மனுஷருக்குப் போதிக்கிறவன் பரலோகராஜ்யத்தில் எல்லாரிலும் சிறியவன் என்னப்படுவான்; இவைகளைக் கைக்கொண்டு போதிக்கிறவனோ, பரலோகராஜ்யத்தில் பெரியவன் என்னப்படுவான்'' என்று அவர் கூறினார் (மத்தேயு 5:19).*

*கிறிஸ்து தாமே ஒருமுறை, நியாயப்பிரமாணம் முழுவதையும் பின்வரும் ஒருசில வார்த்தைகளில் தொகுத்துரைத்தார்: "உன் தேவனாகிய கர்த்தரிடத்தில் உன் முழு இருதயத்தோடும் உன் முழு ஆத்துமாவோடும் உன் முழு மனதோடும் அன்புகூருவாயாக; இது முதலாம் பிரதான கற்பனை. இதற்கு ஒப்பாயிருக்கிற இரண்டாம் கற்பனை என்னவென்றால், உன்னிடத்தில் நீ அன்புகூருவதுபோலப் பிறனிடத்திலும் அன்புகூருவாயாக என்பதே'' (மத்தேயு 22:37-39). இது,*

அவரது உரையைக் கேட்டவர்கள், தேவன் வெளிப்படுத்தியிருந்த வேறு விஷயங்கள் எல்லாவற்றையும் புறக்கணிக்க முடியும் என்று அர்த்தப்படுத்தியதா? இல்லை. இயேசுவின் வார்த்தைகள் சுருக்கமானவைகளாக, தேவன் மனிதன் ஆகியோருடன் ஒருவரின் உறவுநிலை பற்றிய கட்டளைகள் எல்லாவற்றையும் தொகுத்துரைப்பவையாக இருக்கின்றன. நீங்கள், மத்தேயு 22:37-39ன் கொள்கைகளைத் தழுவிக்கொண்டால், கர்த்தருடைய கட்டளை *ஒவ்வொன்றிற்கும்* கீழ்ப்படிய நீங்கள் உங்களால் முடிந்த அளவுக்கு மிகச் சிறப்பாகச் செயல்படுவீர்கள் (காண்க-மத்தேயு 7:21-23; யோவான் 14:15; எபிரெயர் 5:9; 1 யோவான் 5:3).

பிலிப்பியர் 1:27ஐ மீண்டும் கண்ணோக்குங்கள். பவுல், தாம் வாழ்வாரா அல்லது இறப்பாரா என்பதுபற்றி, தாம் பிலிப்பியர்களைத் திரும்பவும் எப்போதாவது காண்பாரா இல்லையா என்பது பற்றிக் கலந்துரையாடி இருந்தார் (1:21-27). பின்பு அவர், கவனத்தைத் தமது சூழ்நிலையில் இருந்து அவர்களின் சூழ்நிலைக்கு மாற்றினார். செயல்விளைவில் அவர், "நான் விரைவில் உங்களைக் காணவருவேன் என்று நம்பியிருக்கிறேன், ஆனால் நான் அதைச் செய்ய முடிந்தாலும் இல்லை என்றாலும், உங்களிடத்தில் ஒரே ஒரு விஷயத்தைக் கேட்கிறேன்: "கிறிஸ்துவின் சுவிசேஷத்திற்குப் பாத்திரராக மாத்திரம் நடந்துகொள்ளுங்கள்," என்று கூறினார். அப்போஸ்தலருடைய கூற்றின் சுருக்கத் தன்மையை நான் நேசிக்கிறேன். அதே வேளையில் அவரது வார்த்தைகள், புதிய ஏற்பாட்டின் பொதுவான போதனையைக் குறைத்துவிடப் பயன்படுத்தப்படக்கூடாது. மிகச்சரியாக இதையே சில விளக்கவுரையாளர்கள் செய்வதைக் காணுகையில் நான் திகைப்படைந்தேன். செயல்விளைவில் அவர்கள், "போதனை, ஒழுக்க அளவீடுகள் மற்றும் இவை போன்றவைகளைக் குறித்து வேதாகமம் என்ன போதிக்கிறது என்பதைப் பற்றி நீங்கள் கவலைப்படத் தேவையில்லை. இவ்விடத்தில் பவுல் கூறியதை மாத்திரம் நீங்கள் செய்தால் போதும்" என்று கூறுகின்றனர். அந்த முடிவை அடைபவர்கள் வேதவசனத்தைத் தனிமைப்படுத்தும் குற்றம் செய்தவர்களாக உள்ளனர். இவ்வார்த்தைகளைப் பிலிப்பியர்கள் வாசித்தபோது அவர்கள், "எவ்வளவு நல்லது! இப்போது நாம், பவுல் கூறும் வேறு எதையும் கவனிக்கத் தேவையில்லை" என்று பதில் அளித்திருப்பார்கள் என்று நினைக்கிறீர்களா? அப்படிப்பட்ட ஒரு கருத்தினால் பவுலும் பிலிப்பியர்களும் திகில் அடைந்திருப்பார்கள்.

மீகா 6:8 மற்றும் மத்தேயு 22:37-39 ஆகியவற்றின் வார்த்தைகளைப் போன்று, பவுலின் வார்த்தைகளும் சுருக்கமானவைகளாக உள்ளன. சுவிசேஷத்திற்குப் பாத்திரராக வாழும்படித் தங்களை ஒப்புவித்தவர்கள், எஜமானரின் கட்டளை ஒவ்வொன்றிற்கும் கீழ்ப்படியத் தங்கள் பெலத்தில் எல்லாவற்றையும் செய்வார்கள் (காண்க பிலிப்பியர் 2:12அ). இந்தப் படிப்பிற்கான வசனப்பகுதியை நாம் ஆழ்ந்து ஆராய்கையில் அந்தத் தெய்வீகக் கேட்புகள் சிலவற்றை நாம் படிப்போம்: அது, பிலிப்பியர் 1:27-30. அவற்றை நாம் கலந்துரையாடுகையில், அவைகள் "ஒரு கிறிஸ்தவர் செய்ய வேண்டிய 'ஒரே' விஷயத்தின்" பாகமாக உள்ளன என்பதைச் சிந்தையில் வைத்துக் கொள்ளுங்கள்.

# ஆளுமைத்தன்மையில் தனிச்சிறந்தவராக இருங்கள் (1:27இ)

பவுல், "நீங்கள் கிறிஸ்துவின் சுவிசேஷத்திற்குப் பாத்திரராக மாத்திரம் நடந்துகொள்ளுங்கள்" என்று கூறியபோது அவர் எதை அர்த்தப்படுத்தினார் என்பதை அதிகம் நெருக்கமாக ஆய்வு செய்வதில் இருந்து நாம் தொடங்குவோமாக. அப்போஸ்தலர் "நீங்கள் நடந்துகொள்ளுங்கள்" என்று கூறியபோது, அவர் வழக்கத்திற்கு மாறாக ஒரு கிரேக்க வார்த்தையைப் பயன்படுத்தினார் (*politeuesthai* என்ற) அந்த வார்த்தை "politics" என்ற வார்த்தையுடன் தொடர்புடையதாக உள்ளது. அது "நீங்கள் *குடிமகன்கள்* என்ற வகையில் நடந்துகொள்ளுங்கள்" என்று அர்த்தப்படுகிறது. ASV வேதாகமத்தில், மூலகிரேக்க வசனத்தின் மீது பின்வரும் குறிப்பு உள்ளது: "தகுதியான குடிமக்கள் என்ற வகையில் நடந்துகொள்ளுங்கள். [3:20 உடன் ஒப்பிட்டுப் பார்க்கவும்.]" AB வேதாகமத்தில், "உங்கள் வாழ்வின் நடக்கையானது நற்செய்திக்கு (சுவிசேஷத்திற்கு) தகுதியுள்ளதாக இருக்கும்படி குடிமகன்கள் என்ற வகையில் நடந்துகொள்ளுவதை நிச்சயப்படுத்திக் கொள்ளுங்கள்" என்றுள்ளது. இந்த நிருபத்தின் பிற்பகுதியில் பவுல், "நம்முடைய குடியிருப்போ பரலோகத்திலிருக்கிறது" என்று கூறினார் (3:20; காண்க எபேசியர் 2:19). மொஃபாட் என்பவர் மொழிபெயர்த்த வேதாகமத்தில், பிலிப்பியர் 3:20 வசனமானது, "நாம் பரலோகத்தில் குடியேற்றம் பெறுபவர்களாக/காலனிவாசிகளாக இருக்கிறோம்" என்றுள்ளது.

பவுலின் சொற்றொடராக்கத்தை மதித்து உணருவதற்கு, பிலிப்பி நகரானது ஒரு ரோமக்குடியேற்ற நகராக/காலனி நகராக இருந்தது என்பதை மனதில் கொள்ளுங்கள் (நடபடிகள் 16:12). "ரோமக் குடியேற்ற நகரம் ஒவ்வொன்றும் உலகம் முழுவதிலும் தூரத்து இடங்களில் நிலைநாட்டப்பட்ட சிறிய ரோமாபுரியாக இருந்தது. ஒரு ரோமக்குடிமகன் எங்கிருந்த போதிலும், தான் ஒரு ரோமன் என்பதை ஒருக்காலும் மறப்பதில்லை."[7] அவர் "ரோமாபுரியில் இருந்து எவ்வளவு தொலைவில் இருந்தாலும், இலத்தீன் மொழியைப் பேசினார், லத்தீன் உடைகளை உடுத்தினார், … நீதிபதிகளை இலத்தீன் பெயர்களைக் கொண்டு அழைத்தார்."[8] செயல்விளைவில் பவுல் பிலிப்பியர்களுக்கு, "நீங்கள் ரோமக் குடிமக்கள் என்ற வகையில் எவ்வாறு நடந்துகொள்வது என்று அறிந்திருக்கிறீர்கள்; இப்போது நீங்கள் பரலோக இராஜ்யத்தின் குடிமக்கள் என்றவகையில் எவ்வாறு நடந்துகொள்வது என்பதைக் கற்றுக் கொள்ளுங்கள். ரோமக்குடிமக்களாக இருத்தல் என்பது உங்களை விசேஷித்தவர்கள் ஆக்குகிறது, ஆனால் பரலோகத்தின் குடிமக்களாக இருத்தல் என்பது உங்களைத் *தனிச்சிறந்தவர்கள்* ஆக்குகிறது!" என்று கூறினார்.

பரலோகத்தின் குடிமக்கள் என்ற வகையில் அவர்கள் எவ்வாறு நடந்துகொள்ள *வேண்டி இருந்தது?* "கிறிஸ்துவின் சுவிசேஷத்திற்குப் பாத்திரராக நடந்து கொள்ள வேண்டி இருந்தது." அவர்கள் சுவிசேஷத்திற்கு *மதிப்புப் பெற்றுத் தரும் வகையில்,*[9] சுவிசேஷத்திற்குக் *கனம் தரும் வகையில்* (CEV வேதாகமம்), மற்றவர்களைச் சுவிசேஷத்தினிடம் *ஈர்க்கும் வகையில்* நடந்துகொள்ள வேண்டியிருந்தது. பவுலின் இந்தப் புத்திமதியை நான் நினைக்கையில், நான் ஆஸ்திரேலியாவில் வாழ்ந்து கொண்டிருந்தபோது அங்கு வந்த

*அமெரிக்கர்களைப் பற்றிய சிந்தனைக்கு என் மனம் பின்னோக்கிச் செல்கிறது. அவர்களில் பெரும்பான்மையானவர்கள் அன்புக்குரிய மக்களாக இருந்தனர், ஆனால் ஒரு சிலர், எனது சொந்த நாட்டைப் பிரதிநிதித்துவப்படுத்துவதில் வறியவர்களாக இருந்தனர். அவர்கள் எங்கள் ஆராதனை ஊழியங்களுக்கு வந்தபோது, ஆஸ்திரேலிய உணவு மற்றும் ஆஸ்திரேலியப்பழக்கங்கள் பற்றி உரத்து முறையிட்டனர். அது என்னைச் சங்கடத்திற்கு உள்ளாக்கிற்று, ஏனெனில் இந்த விருந்தினர்கள் அமெரிக்கர்கள் என்பதை எனது ஆஸ்திரேலிய சகோதர சகோதரிகள் அறிந்திருந்தனர். அவர்கள் தங்கள் குடியுரிமைக்குக் கனம் கொடுக்கும் வகையில் நடந்துகொள்ளவில்லை.*

*நாம் வாழ்வில் கடந்து செல்லுகையில், முடிவுகளை மேற்கொள்ளவும் பிரச்சனைகளைத் தீர்க்கவும் வேண்டியுள்ளது. சிலவேளைகளில், நாம் என்ன செய்ய வேண்டும் என்பது பற்றி வேதவசனங்கள் தெளிவாக உள்ளது; சிலவேளைகளில் நாம், வசனத்தின் பொதுவான கொள்கைகளைச் சார்ந்திருக்க வேண்டியுள்ளது. வாழ்வின் அறைகூவல்களை நாம் எதிர்கொள்ளுகையில், பின்வரும் கேள்விகள் பதில்களைக் கண்டறிய நமக்கு உதவலாம்: "இந்தச் சூழ்நிலையில் பரலோகத்தின் குடிமகன் என்ன செய்வார்? பரலோகத்தின் குடிமகன் எவ்வாறு செயல்படுவார்?" நீங்கள் ஒரு கிறிஸ்தவராக இருந்தால், நீங்கள் தனிச்சிறந்தவர் என்பதை ஒருக்காலும் மறவாதீர்கள் - ஏனெனில் நீங்கள் தேவனுடைய இராஜ்யத்தின் குடிமகனாக இருக்கிறீர்கள்!*

## கொள்கைகளில் அலைவுபடாதிருங்கள் (1:27, 30)

பிலிப்பியர்கள், "கிறிஸ்துவின் சுவிசேஷத்திற்குப் பாத்திரராக" நடந்துகொள்ள வேண்டும் என்று கூறியபோது பவுல் தமது சிந்தையில் கொண்டிருந்தது என்ன என்பது பற்றிப் பிலிப்பியர்கள் யூகிக்கத் தேவையில்லாதிருந்தது. [ஏனெனில்] அவர் அதே வசனத்தின் முற்பகுதியில் பின்வருமாறு கூறினார்: "நான் வந்து உங்களைக் கண்டாலும், நான் வராமலிருந்தாலும், நீங்கள் ஒரே ஆவியிலே உறுதியாய் நின்று (வசனம் 27அ, ஆ,). இவ்விடத்தில் "ஆவி" என்பது *pneuma* என்ற கிரேக்க வார்த்தையின் ஒரு வடிவத்திலிருந்து மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. இது பரிசுத்த ஆவியானவரைக் குறிப்பிடக்கூடும்; ஆனால் சந்தர்ப்பப் பொருளில் இது அனேகமாக மனிதரின் ஆவியைக் குறிப்பதாக இருக்கலாம். பவுல் "ஒரே ஆத்துமாவினாலே" என்ற சொற்றொடரைக் கொண்டு தொடர்ந்தார் (வசனம் 27ஆ). "ஆத்துமா" என்று தமிழில் மொழிபெயர்க்கப்பட்டுள்ள கிரேக்க வார்த்தையானது, ஆங்கிலத்தில் "*Spirit*" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ளது, இது *psyche* என்ற (அல்லது *psuche* என்ற) கிரேக்க வார்த்தையின் ஒரு வடிவமாக உள்ளது. இது "ஆவி" என்றும் தரவழைக்கப்படக்கூடும். அப்போஸ்தலர் தமது வாசகர்கள் "உறுதியாய் நின்று, ... சுவிசேஷத்தின் விசுவாசத்திற்காகக் கூடப்போராடினர்" என்று கேள்விப்படலாம் என நம்பியிருந்தார். அவர் இந்த சகோதரர்களைத் திரும்பவும் சந்திக்கலாம் என்று எதிர்பார்த்து இருந்தார் (வசனங்கள் 25-27); ஆனால் அது நடந்தாலும் இல்லை என்றாலும், அவர்கள் கர்த்தருக்கு உண்மையாக நிலைத்திருக்க வேண்டும் என்று அவர் விரும்பினார்.

1ம் அதிகாரத்தின் முடிவிலும் 2ம் அதிகாரத்தின் தொடக்கத்திலும் "ஐக்கியம்" என்ற பாடக்கருத்து இழையோடுகிறது. 1:27ல் பவுல், ஐக்கியத்தின் அவசியத்தை மூன்று முறை வலியுறுத்தினார்:

- அவர் தமது வாசகர்கள் *எண்ணப்போக்கில்* ஐக்கியமாயிருக்க வேண்டும் என்று விரும்பினார்: "ஒரே ஆவியிலே."
- அவர்கள் *கவனத்தில்* ஐக்கியமாயிருக்க வேண்டும் என்று அவர் விரும்பினார்: "ஒரே ஆத்துமாவினாலே."
- அவர்கள் *செயல்பாட்டில்* ஐக்கியமாயிருக்க வேண்டும் என்று அவர் விரும்பினார்: "கூடப்போராடி."

ஐக்கியம் என்பது மிகவும் முக்கியமானதாக உள்ளது! 27ம் வசனத்தில் கேட்கப்பட்டுள்ளவற்றை நாம் *பிறருடன் இணைந்து* செய்தால், அவற்றை நிறைவேற்றுதல் என்பது மிகவும் சுலபமாக இருக்கும். இவ்வசனத்தில் "கூடப்போராடி"[10] என்றுள்ள இடத்தில் மூலமொழி வசனமானது, "ஒரு பொதுவான குறிக்கோளுக்காக விளையாட்டு வீரர்கள் ஒன்றுகூடிப் போராடுதல் என்று பொழிப்புரை செய்யப்படலாம். இது களத்தில் உள்ள ஓரக் கோடுகளின் அருகே பவுல் நின்றுகொண்டு, 'நாம் மாபெரும் குழுச் செயல்பாட்டைக் காண்போமாக!' என்று வேண்டிக்கொள்வது போல் உள்ளது."[11]

அடுத்த பாடத்தில், நாம் 2:2ம் வசனத்திற்குச் செல்லும் வரையிலும், ஐக்கியம் பற்றிய நமது விரிவான கலந்துரையாடலைச் சற்றே நிறுத்தி வைப்போம். இந்த வேளைக்கு நான், தேவனுடைய பிள்ளையாக இருப்பவருக்கு இந்த உலகம் எதைச் செய்தாலும், அவர் *அசைக்கப்படாமல் நிலைத்திருக்க வேண்டும்* என்ற பிலிப்பியர் 1:27ன் வலியுறுத்தத்தின் மீது கவனம் குவிக்க விரும்புகிறேன். பிலிப்பி நகரில் இருந்த சகோதரர்கள் *உறுதியாக நிலைநிற்க வேண்டும்* என்று பவுல் புத்திகூறினார் (காண்க 1 கொரிந்தியர் 16:13; எபேசியர் 6:11, 13, 14; 1 தெசலோனிக்கேயர் 3:8; 2 தெசலோனிக்கேயர் 2:15).

நாம் வாழ்வா சாவா என்ற ஆவிக்குரிய போராட்டத்தில் ஈடுபட்டுள்ளோம் (காண்க எபேசியர் 6:10-17; 2 கொரிந்தியர் 10:4). பவுல் "போராடியதாக" பிலிப்பியர்கள் கண்டிருந்த, அவர் "இன்னமும் போராடிக் கொண்டிருந்த அதே யுத்தங்களை" பிலிப்பியர்கள் "போராடவேண்டியிருக்கும்" என்று பிலிப்பியர்களுக்குப் பவுல் கூறினார் (பிலிப்பியர் 1:30). "உலகமானது … கிறிஸ்தவத்திற்கு விரோதமான சூழ்நிலையாகவே எப்போதும் இருந்துள்ளது."[12] உங்கள் விசுவாசம் தாக்கப்படலாம். உங்கள் உறுதிப்பாடு மற்றும் தரஅளவைகள் பற்றி மக்கள் கேலி செய்யலாம். உங்கள் பலவீனங்களை அறிகிற சாத்தான், நீங்கள் தவறு செய்யும்படி உங்களைத் தூண்டலாம். சில வேளைகளில் வாழ்வானது உங்களைக் மூழ்கடிப்பதாக இருக்கக் கூடும். இவற்றில் ஏதாவது நடைபெறும்போது, பவுல் உங்களைக் கர்த்தருக்கு நெருக்கமாக இழுத்து அவருக்குள் உறுதியாக நிலைநிற்கச் செய்வார் (பிலிப்பியர் 4:1; காண்க 1 பேதுரு 5:7).

"சுவிசேஷத்தின் விசுவாசம்" என்பது ஒரு போர்க்களமாக உள்ளது (பிலிப்பியர் 1:27). "விசுவாசம்" என்பது, இயேசுவின் மீதான விசுவாசத்தில் மையங்கொண்டுள்ள போதனையின் அமைப்பை - அதாவது புதிய ஏற்பாட்டை குறிக்கிறது. சுவிசேஷத்தின் விசுவாசமானது தொடர்ந்து தாக்குதலின் கீழ் இருக்கிறது. அதை வெறுப்பவர்கள், அதை சிறுமைப்படுத்துபவர்கள், அதை மறுப்பவர்கள், மற்றும் அதை அழிக்க நாடுபவர்கள் உள்ளனர். நீங்களும் நானும் அதைச் செய்ய (அதாவது அதன்படி *வாழ*), அதை அறிவிக்க, அதைத்

*தற்காக்க மற்றும் அதற்காக மரிக்கக்கூட மனவிருப்பமாயிருக்க வேண்டும்! நாம், "பரிசுத்தவான்களுக்கு ஒருவிசை ஒப்புக்கொடுக்கப்பட்ட விசுவாசத்திற்காக ... தைரியமாய்ப் போராட" தயாராக இருக்க வேண்டும் (யூதா 3ஆ).*

## *உபத்திரவத்தில் பயமில்லாதிருங்கள் (1:28-30)*

*நாம் ஒரு யுத்தத்தில் இருந்தால், நமக்கு விரோதிகள் இருக்க வேண்டும். வேறொரு இடத்தில் பவுல், சாத்தானும் அவனது உடன் வேலையாட்களும் நமது ஆவிக்குரிய எதிரிகளாக இருக்கின்றனர் என்று வலியுறுத்தினார் (எபேசியர் 6:11, 12). இருப்பினும் சட்டப்படி, பிசாசானவன் மக்கள் மூலமாகக் கிரியை செய்கிறான் (காண்க மத்தேயு 16:23; யோவான் 6:70).*

*தொடர்ந்து பவுல், "(எதிர்க்கிறவர்களுக்கு) நீங்கள் மருளாதிருக்கிறது" என்று உரைத்தார் (வசனம் 28அ). இந்த "எதிர்க்கிறவர்கள்" யார் என்பது பற்றி நாம் உறுதியாக எதுவும் கூற இயலாது; ஆனால் 30ம் வசனத்தில் அப்போஸ்தலர், பிலிப்பி நகரில் இருந்த கிறிஸ்தவர்கள், அந்த நகரத்தில் தாம் அனுபவித்திருந்ததும் இப்போது ரோமாபுரியில், தாம் அனுபவித்துக் கொண்டிருப்பதுமான, "அதே போராட்டத்தை அனுபவித்துக்" கொண்டிருந்தனர் என்று கூறினார். பிலிப்பி நகரில் இருந்த அரசு அதிகாரிகள் அந்த நகரத்துக் குடிமக்களால் தூண்டிவிடப்பட்டுப் பவுலின் எதிரிகள் ஆகியிருந்தனர் (காண்க-நடபடிகள் 16:19-22). ரோமாபுரியில், எருசலேம் நகரத்துக் குடிமக்களால் தூண்டிவிடப்பட்டிருந்த யூதத்துவப் பிரதிநிதிகளினுடைய அரசு அலுவலர்கள் அவரது முதன்மை விரோதிகளாக இருந்தனர் (காண்க நடபடிகள் 25:6-11). புறதெய்வ வணக்கம் செய்த மக்களாலும் ஒருவேளை சிறிய அளவிலான யூதத்துவ சமூகத்தினராலும் செல்வாக்குச் செலுத்தப்பட்டிருந்த இரக்கமற்ற அரசு அலுவலர்களே, பிலிப்பியர்களின் முதன்மை எதிரிகளாக இருந்திருப்பார்கள்.*

*பிலிப்பியர்களின் எதிரிகள் யாராக இருந்தாலும், சில வேளைகளில் போராட்டமானது மூழ்கடிக்கச் செய்வதாக இருந்திருக்க வேண்டும், ஏனெனில் சகோதரர்கள் தங்களை எதிர்க்கிறவர்களால் "மருளாதிருக்க" வேண்டும் என்று பவுல் ஊக்கப்படுத்தினார். "மருளாதிருத்தல்" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள (pturo என்பதன் ஒரு வடிவமான) கிரேக்க வார்த்தையானது "அச்சம் அடைதல், [அல்லது] பயமடைதல், ஒருவரை அச்சம் அடையச் செய்தல்" என்று அர்த்தப்படுகிறது.[13] இந்த வார்த்தை "தொடக்கத்தில், பயமடைந்த ஒரு மிருகம், குறிப்பாக கூச்சமான ஒரு குதிரை அல்லது திகைப்படைந்த மந்தையின் கட்டுப்படுத்த இயலாத மிரண்டோடும் ஓட்டம் என்பதற்கு நடைமுறைப்படுத்தப்பட்டது."[14] மின்னலினால் திகைப்படைந்து புல்வெளியின் குறுக்கே மிரண்டோடும், குதிரைகளின் மந்தையொன்றை உங்கள் சிந்தையில் சித்தரித்துக் கொள்ளுங்கள்.[15] நீங்கள் மனிதரீதியான விவரிப்பு ஒன்றை விரும்பித் தேர்ந்து கொள்வதென்றால், கெத்செமெனே தோட்டத்திற்கு வெளியே "ஓடிப்போகையில்" சீஷர்கள் இருந்த நிலையைப் பற்றிச் சிந்தித்துப் பாருங்கள் (மத்தேயு 26:56ஆ). இவ்வாறு பயமடைந்து விடக்கூடாது என்று பவுல் தமது வாசகர்களிடத்தில் கெஞ்சிக் கேட்டுக் கொண்டார். இயேசு தமது சீஷர்களிடத்தில், "என் சிநேகிதராகிய உங்களுக்கு நான் சொல்லுகிறேன்: சரீரத்தைக் கொலைசெய்து, அதன்பின்பு அதிகமாக ஒன்றும் செய்யத் திராணியில்லாதவர்களுக்குப் பயப்படாதிருங்கள்" என்று கூறினார் (லூக்கா 12:4).*

எபிரெயர் 13:6ம் வசனம், "அதினாலே நாம் தைரியங்கொண்டு: கர்த்தர் எனக்குச் சகாயர், நான் பயப்படேன், மனுஷன் எனக்கு என்னசெய்வான் என்று சொல்லலாமே" என்று கூறுகிறது.

பிலிப்பியர்கள் தங்கள் விசுவாசத்திற்காகத் துன்புற வேண்டியிருந்தபோது, அவர்கள் "மருளாதிருக்க" எது உதவி செய்திருக்கும்? அவர்களின் மனக்காட்சிக்கு உதவப் பவுல் மூன்று சத்தியங்களைப் பட்டியலிட்டார். முதலாவது, *அவர்கள் துன்புறுதலானது அவர்கள் தேவனால் அங்கீகரிக்கப்பட்டிருந்தனர் என்று சுட்டிக் காண்பித்தது:* "நீங்கள் மருளாதிருக்கிறது அவர்கள் கெட்டுப்போகிறதற்கும், நீங்கள் *இரட்சிக்கப்படுகிறதற்கும் அத்தாட்சியாயிருக்கிறது;*[16] இதுவும் தேவனுடைய செயலே" (வசனம் 28; என்னால் வலியுறுத்தப்படுகிறது). துன்புறுதலைப் பிலிப்பியர்கள், தாங்கள் பலவீனமாகவும் தங்கள் எதிராளிகள் பலத்தவர்களாகவும் இருந்ததற்கு "ஒரு அத்தாட்சியாக" கண்ணோக்கியிருக்க முடிந்திருக்கும் - ஆனால் செயல்விளைவில் அப்போஸ்தலர், "இல்லை, அது நீங்கள் இரட்சிப்பின் சாலையில் இருக்கிறீர்கள் என்பதற்கு ஒரு அத்தாட்சியாக உள்ளது!" என்று கூறினார். துன்புறுதல் மாத்திரம் ஒருவர் தேவனால் அங்கீகரிக்கப்பட்டவராக இருக்கிறார் என்பதற்கு நிரூபணமாக இருப்பதில்லை; ஆனால் நீங்கள் கிறிஸ்தவராக இருப்பதால் துன்புற்றால், நீங்கள் சரியானவற்றைச் செய்பவராக இருக்க வேண்டும்! இது ஆறுதலைக் கொண்டுவர முடியும், ஏனெனில் "தேவன் நம்முடைய பட்சத்திலிருந்தால் நமக்கு விரோதமாயிருப்பவன் யார்?" (ரோமர் 8:31).

அவர்களின் உபத்திரவம், அவர்களுடைய எதிராளிகளுக்கு "கெட்டுப்போகிறதற்கு அத்தாட்சியாக" உள்ளது என்றும் அவர் கூறினார். அவர்களின் எதிரிகள், கிறிஸ்துவின் சபையை அழிப்பதற்கான தங்கள் முயற்சிகள் "கெட்டுப்போகிறதற்கு அடையாளமாக" இருந்தன என்று அறிந்து இருந்தார்களா? அனேகமாக இல்லை. பிலிப்பியர் 1:28ம் வசனம், NASB வேதாகமத்தில் "for them" (காண்க KJVமற்றும் NIV) என்று குறிப்பிடுகையில், கிரேக்க வசனமானது "அவர்களுக்கு" என்றும் மொழிபெயர்க்கப்பட முடியும். இது, கிறிஸ்தவர்களின் உபத்திரவம் *அவிசுவாசிகளுக்கு* "அத்தாட்சியாக" இருக்கச் சாத்தியமான வழி என்ன என்பது பற்றிய கலந்துரையாடலைத் தூண்டியுள்ளது. கிறிஸ்தவர்கள் துன்புறுத்தப்படும்போதும் கூட தவறு செய்யவில்லை என்ற உண்மையானது அவர்களின் எதிராளிகளில் சிலர், நின்று தாங்கள் ஒருவேளை சரியாக இருக்கிறோமா அல்லது தவறாக இருக்கிறோமா என்று மறுபடி ஆழ்ந்து சிந்திக்கச் செய்திருக்கலாம். பிலிப்பியர்களைத் துன்புறுத்தியவர்கள், கிறிஸ்தவர்களுக்கு எதிரான தங்கள் வெற்றியை, தாங்கள் சரியாக இருந்தமைக்கும் இயேசுவைப் பின்பற்றியவர்கள் தவறாக இருந்தமைக்கும் "அத்தாட்சியாக" கண்ணோக்கியிருக்க அதிக வாய்ப்புள்ளது. இருந்தபோதிலும், ஒவ்வொரு நாளும் கடந்துசென்ற போது, அவர்கள் நித்திய அழிவை நோக்கி ஒரு படி நெருங்கி நகர்ந்தனர். "சபைக்கும் சுவிசேஷத்திற்கும் எதிர்ப்பு விடாப்பிடியாக இருத்தல் என்பது, நிறைவான அழிவிற்கு நிச்சயமான அத்தாட்சியாக உள்ளது, ஏனெனில் அது இரட்சிப்பின் ஒரே வழியைப் புறக்கணித்தலை உள்ளடக்குகிறது."[17] பிலிப்பியர்கள், தங்கள் பிரச்சனைகள் "நீங்கள் இரட்சிக்கப்படுவீர்கள் என்பதற்கும் உங்கள் விரோதிகள் இழந்துபோகப்படுவார்கள் என்பதற்கும் தேவனிடமிருந்து வரும் நிரூபணமாக" இருந்தன என்பதை அறிய வேண்டும்

என்று பவுல் விரும்பினார்.

*கர்த்தருக்காகத் துன்புறுத்தப்படுதல் ஒரு சிலாக்கியமாக இருந்தது* என்பது பற்றிய பிலிப்பியரின் கண்ணோக்கிற்கு உதவிசெய்யும் வகையிலான, பவுலின் இரண்டாவது சத்தியம் பின்வருவதாக இருந்தது: "ஏனெனில் கிறிஸ்துவினிடத்தில் விசுவாசிக்கிறதற்குமாத்திரமல்ல, அவர் நிமித்தமாகப் பாடுபடுகிறதற்கும் உங்களுக்கு அருளப்பட்டிருக்கிறது" (வசனம் 29). "Granted" ["அருளப்பட்டிருக்கிறது"] என்பதற்கான (*charizomai* என்பதன் ஒரு வடிவமான) கிரேக்க வார்த்தை "கிருபை" (*charis*) என்ற வார்த்தை வந்த அதே வேர்வார்த்தையில் இருந்தே வந்துள்ளது. இது, "ஒரு இலவச சலுகை *அளித்தல்*" என்று அர்த்தப்படுகிறது.[18] 29ம் வசனம் தேவன் நமக்குத் தருகிற இரண்டு கொடைகளைக் குறிப்பிடுகிறது. விசுவாசித்தல் என்பது ஒரு கொடையாக உள்ளது. விசுவாசத்தை உண்டாக்குகிற வேதாகமத்தையும் (ரோமர் 10:17) அதன் சத்தியங்களைப் புரிந்துகொள்ளக்கூடிய திறனுள்ள மனங்களையும் (எபேசியர் 5:17) கர்த்தர் நமக்குக் கொடுத்தார் என்ற வகையில், அவர் நமக்கு விசுவாசத்தை "கொடுக்கிறார்." விசுவாசத்தின் கொடைக்காகத் தேவனுக்கு நன்றி! விசுவாசத்தின் மூலமாக தாம், தேவனுடைய கிருபையை நமதாக்கிக் கொள்கிறோம் (எபேசியர் 2:8, 9) மற்றும் அன்றாடம் நிலைநிறுத்தப்படுகிறோம். விசுவாசம் என்பது "பரத்திலிருந்து" வருகிற "நல்ல" கொடைகளின் ஒன்றாக உள்ளது (யாக்கோபு 1:17).

கிறிஸ்துவினிமித்தம் பாடுபடுதல் என்பது, 29ம் வசனத்தில் குறிப்பிடப்பட்டுள்ள இன்னொரு கொடையாக உள்ளது. இது "விரும்பப்படாத கொடை" என்று அழைக்கப்பட்டுள்ளது. கொடைகள் நிரம்பிவழியும் மேஜை ஒன்றை எனது மனக்காட்சியில் நான் காண்கிறேன்: அதில் கர்த்தர் நமக்கு அருளுகிற ஆச்சரியமான எல்லா ஆசீர்வாதங்களும் உள்ளன. இந்தக் கொடைகளில், மக்கள் தாங்கள் விரும்புகிறவற்றைத் தேர்ந்து எடுத்துக்கொள்ள அனுமதிக்கப்பட்டால், துன்புறுதலின் கொடையே அனேகமாக, மேஜையில் விடப்பட்ட கடைசிக் கொடையாக இருக்கும். விசுவாசித்தலைக் கிறிஸ்தவ வாழ்வின் "பெருமகிழ்வு நிறைந்த பாகம்" என்றும் துன்புறுதலை "கடினமான பாகம்" என்றும் சார்லஸ் ஸ்வின்டால் என்பவர் அழைத்தார்.[19]

இருந்தபோதிலும், துன்புறுதல் என்பது கிறிஸ்தவ அனுபவத்தின் பாகமாக உள்ளது - மற்றும் துன்புறுதலில் மதிப்புள்ளது - என்று வேதாகமம் போதிக்கிறது (காண்க யோவான் 16:33; நடபடிகள் 5:41; 14:22; ரோமர் 5:3-5; 2 தெசலோனிக்கேயர் 1:4, 5; எபிரெயர் 12:5-7, 11; யாக்கோபு 1:2-4; 1 பேதுரு 3:14; 4:12-14). துன்புறுதல் என்பது விசுவாசத்தினால் சந்திக்கப்படுகையில், அது கிறிஸ்தவர்கள் என்ற வகையில் நாம் வளர நமக்கு உதவுகிறது.

இருப்பினும், துன்புறுதலில் அல்ல, ஆனால் "அவர் நிமித்தமாக" - இயேசுவின் நிமித்தமாக துன்புறுதலில்தான் ஆசீர்வாதம் உள்ளது என்பதைப் புரிந்துகொள்ளுங்கள். பேதுரு, "ஆதலால் உங்களில் ஒருவனும் கொலைபாதகனாயாவது, திருடனாயாவது, பொல்லாங்கு செய்தவனாயாவது, அந்நிய காரியங்களில் தலையிட்டுக்கொண்டவனாயாவது பாடுபடுகிறவனாயிருக்கக்கூடாது. ஒருவன் கிறிஸ்தவனாயிருப்பதினால் பாடுபட்டால் வெட்கப்படாமலிருந்து, அதினிமித்தம் [கிறிஸ்துவின் நாமத்தின்நிமித்தம்] தேவனை மகிமைப்படுத்தக்கடவன்" என்று

எழுதினார் (1 பேதுரு 4:15, 16). கர்த்தருக்காகப் பாடுபடுதல் ஒரு சிலாக்கியமாக உள்ளது. இயேசு பின்வருமாறு கூறினார்:

> நீதியினிமித்தம் துன்பப்படுகிறவர்கள் பாக்கியவான்கள்; பரலோகராஜ்யம் அவர்களுடையது.
>
> என்னிமித்தம் உங்களை நிந்தித்துத் துன்பப்படுத்தி, பலவித தீமையான மொழிகளையும் உங்கள்பேரில் பொய்யாய்ச் சொல்வார்களானால் பாக்கியவான்களாயிருப்பீர்கள்; சந்தோஷப்பட்டு, களிகூருங்கள்; பரலோகத்தில் உங்கள் பலன் மிகுதியாயிருக்கும் (மத்தேயு 5:10-12அ).

*பிலிப்பியர்கள் துன்புற்றபோது அவர்கள் நல்ல தோழமையில் இருந்தார்கள்* என்பதே, துன்புறுத்தப்படுதல் பற்றிய பிலிப்பியரின் கருத்துநோக்கைக் கூர்மையாக்கக் பவுல் கொடுத்த மூன்றாவது சத்தியமாக உள்ளது: "நீங்கள் என்னிடத்திலே கண்டதும் எனக்கு உண்டென்று இப்பொழுது கேள்விப்படுகிறதுமான போராட்டமே உங்களுக்கும் உண்டு" (பிலிப்பியர் 1:30). "போராட்டம்" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள (agon என்பதன் ஒரு வடிவமானது) சொற்றொடர், ஆங்கிலத்தில் நாம் "agony" என்ற வார்த்தையை எதிலிருந்து பெறுகிறோமோ அதே கிரேக்க வார்த்தையாக உள்ளது. இது, வட்ட அரங்கில் கிளாடியேட்டர்களால் போரிடப்பட்ட உக்கிரமான யுத்தங்களை விவரிக்கப்பயன்படுத்தப்பட்டது.[20] 30ம் வசனத்தில் உள்ள வார்த்தைகள், பிலிப்பி நகரத்தில் பவுலுக்கு நேர்ந்தவற்றின் நினைவுகளுடன் பிலிப்பியக் கிறிஸ்தவர்களின் சிந்தைகளில் பெருக்கெடுத்திருக்கலாம். (சிறைச்சாலைக்காரரின் முகத்தில் தோன்றிய சங்கடத்தை உங்களால் காண முடிகிறதா?) இப்போது, அவர்கள் அதே வகையான துன்பத்தின் கீழ்க் கடந்து சென்று கொண்டிருந்தனர். அவர்கள் தனித்து விடப்படவில்லை என்பதை அவர்கள் அறிய வேண்டும் என்று பவுல் விரும்பினார் - மற்றும் அதையே அவர் புரிந்து கொண்டிருந்தார்.

தீமோத்தேயுவுக்கு எழுதிய இரண்டாம் நிருபத்தில் பவுல், "அன்றியும் கிறிஸ்து இயேசுவுக்குள் தேவபக்தியாய் நடக்க மனதாயிருக்கிற யாவரும் *துன்பப்படுவார்கள்*" என்று எழுதினார் (3:12; என்னால் வலியுறுத்தப்படுகிறது). அது உங்களுக்கு நடக்கும்போது, இந்த மூன்று சத்தியங்களும் உங்களை ஆறுதல்படுத்தி உங்களுக்குப் பலத்தைக் கொடுக்கக்கூடும்:

- உங்கள் உபத்திரவங்கள், நீங்கள் தேவனால் அங்கீகரிக்கப்பட்டிருக்கிறீர்கள் என்பதற்குக் குறிப்படையாளமாக உள்ளது.
- கர்த்தருக்காகத் துன்புறுதல் ஒரு சிலாக்கியமாக உள்ளது.
- நீதியின் நிமித்தம் நீங்கள் துன்புறும்போது, நீங்கள் ஒரு நல்ல தோழமையில் இருக்கிறீர்கள் (காண்க மத்தேயு 5:12ஆ).

## முடிவுரை

நாம், "ஒரு கிறிஸ்தவர் செய்ய வேண்டிய 'ஒரே' விஷயம்" என்பதைப் பற்றிக் கலந்துரையாடி இருக்கிறோம். சுலபமாக நிறைவேற்றக் கூடியதான ஒரே ஒரு நிபந்தனையை நீங்கள் கண்டறியும்படி நம்பிக்கையாயிருந்தால், அநேகமாக நீங்கள் ஏமாற்றம் அடைந்திருப்பபீர்கள்; ஏனெனில் நாம் பொறுப்புகளின் பல

வகைகளைத் தொட்டிருக்கிறோம். இருப்பினும் நான், பின்வரும் சிந்தனை உதவும் என்று நம்புகிறேன்: "ஒரு கிறிஸ்தவர் என்ற வகையில் நான் செய்ய வேண்டிய விஷயம் ஒன்றைக் கொண்டிருக்கிறேன் - அது பரலோக ராஜ்யத்தின் குடிமகன்/குடிமகள் *போன்று* செயல்படுவதே ஆகும்!"

நாம் பரலோக வட்டாரத்தின் குடிமகன்கள் என்று புரிந்துணரக்கூடும் என்றால், இது பிலிப்பியர் 1:27-30ன் பொறுப்புகளை நிறைவேற்ற நமக்கு உதவும்:

- பெரும்பான்மையான குடிமக்கள் தங்கள் குடிமைத்துவம் பற்றிப் பெருமை அடைகின்றனர். பரலோகத்தின் குடிமக்கள் என்ற வகையில் நாம், நமது தனிச்சிறப்பைப் புரிந்துகொண்டு நமது "சொந்தநாட்டின்" மீது சாதகமாக சிந்தனைகளைப் பிரதிபலிக்கும் வகையில் வாழ வேண்டும்.
- குடிமக்கள் என்பவர்கள் தங்களைக் காட்டிலும் பெரிய ஒன்றின் பாகமாக உள்ளனர்; ஒன்றுகூடி இணைந்த நிலையில், அவர்கள் தங்கள் விரோதிகளை எதிர்த்து நிற்க முடியும். பரலோகத்தின் குடிமக்கள் என்ற வகையில், நாம் ஒருவர் பிறரை ஆதரிக்கிறோம், இவ்வாறாக நாம், தடைகள் எவையென்றாலும், உறுதியாக நிலைநிற்க முடியும்.
- ஒன்றுகூடி இணைந்த நிலையின் மூலமாக, குடிமக்கள் தைரியத்தை ஆதாயப்படுத்திக் கொள்கின்றனர். இனிவரவிருக்கும் உலகத்தின் குடிமக்கள் என்ற வகையில், நாம் இந்த உலகத்தினால் பயமுறுத்தப்படுவதில்லை. மாறாக, "இவையெல்லாவற்றிலேயும் நாம் நம்மில் அன்புகூருகிறவராலே முற்றும் ஜெயங்கொள்ளுகிறவர்களாயிருக்கிறோமே" (ரோமர் 8:37).

பிலிப்பியர் 2:1-4 வசனப் பகுதியின் மீதான, "ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு" என்ற பாடத்தில், பரலோக ராஜ்யத்தின் குடிமகன்/குடிமகள் எவ்வாறு நடந்துகொள்ள வேண்டும் என்பது பற்றிய நமது கலந்துரையாடலை நாம் தொடருவோம்.

---

குறிப்புகள்

[1]William F. Arndt and F. Wilbur Gingrich, *A Greek-English Lexicon of the New Testament and Other Early Christian Literature* (Chicago: University of Chicago Press, 1957), 529. பெரும்பான்மையான தரமான மொழிபெயர்ப்புகள், monon என்பதை "மாத்திரம்" என்றே தரவழைக்கின்றன (KJV; NKJV; ASV; NASB; RSV; NRSV; CJB), ஆனால் ஒரு சில மொழிபெயர்ப்புகள் இவ்வார்த்தையை மொழிபெயர்ப்பதற்குப் பதிலாகப் பொருள் விளக்கியிருக்கின்றன (NIV; NCV). [2]Gerald F. Hawthorne, *Word Biblical Commentary,* vol. 43, *Philippians,* ed. David A. Hubbard and Glenn W. Barker (Waco, Tex.: Word Books, 1983), 54. [3]Ibid., 55. [4]William Barclay, *The Letters to the Philippians, Colossians, and Thessalonians*, rev. ed., The Daily Study Bible Series (Philadelphia: Westminster Press, 1975), 29. [5]Alec Motyer, *The Message of Philippians: Jesus Our Joy*, The Bible Speaks Today series, ed. John R. W. Stott (Downers Grove, Ill.: Inter-Varsity Press, 1984), 92. [6]Charles R. Erdman, *The Epistle of Paul to the*

*Philippians* (Grand Rapids, Mich.: Baker Book House, 1983), 71. [7]Maxie D. Dunnam, *Galatians, Ephesians, Philippians, Colossians, Philemon*, The Communicator's Commentary, ed. Lloyd J. Ogilvie (Waco, Tex.: Word Books, 1982), 272. [8]Barclay, 30. [9]Eugene H. Peterson, *The Message: New Testament with Psalms and Proverbs* (Colorado Springs: NavPress, 1995), 490. [10]இந்தச் சொற்றொடர் கிரேக்க மொழியில் *sun* ("உடன்") *athleo* என்ற முன்னிடைச் சொல்லை, "athlete" மற்றும் "athletic" என்ற வார்த்தைகளை நாம் பெறுகிற சொல்லான *sunathleo* என்ற வார்த்தையின் ஒரு வடிவமாக உள்ளது. இவ்வார்த்தை, "ஒரு விளையாட்டு வீரர் போராடுவது போலப் போராடுதல்" என்று அர்த்தப்படுகிறது (*The Analytical Greek Lexicon* [London: Samuel Bagster & Sons, Ltd., 1971], 8, 385).

[11]Avon Malone, *Press to the Prize* (Nashville: 20th Century Christian, 1991), 45. [12]James Burton Coffman, *Commentary on Galatians, Ephesians, Philippians, Colossians* (Austin, Tex.: Firm Foundation Publishing House, 1977), 273. சுவிசேஷத்திற்கு விரோதமான சூழ்நிலைகளில் வாழ்கிற கிறிஸ்தவர்கள், பவுலின் புத்திமதியை உண்மையாகவே புரிந்துகொள்கின்றனர். [13]Arndt and Gingrich, 735. [14]John A. Knight, *Philippians, Colossians, Philemon,* Beacon Bible Expositions (Kansas City, Mo.: Beacon Hill Press, 1985), 57. [15]உங்கள் உரையைக் கேட்பவர்கள், மிரண்டோடும் மற்ற பெரிய விலங்குகளைப் பற்றி அதிகம் அறிந்திருக்கலாம். விஷயம் அப்படியிருந்தால், இந்த விவரிப்பில் அந்த விலங்குகளைப் பதிலிட்டுக் கொள்ளவும். [16]*Endeixes* என்ற கிரேக்க வார்த்தை, " 'வெளியே சுட்டிக்காண்பித்தல்' என்று நேரடி அர்த்தப்படுகிறது. இது ... 'ஒரு செயல்விளக்கம் அல்லது நிரூபணம்' என்று அர்த்தப்பட வந்தது" (James M. Tolle, *Notes on Philippians* [San Fernando, Calif.: Tolle Publications, 1972], 24). [17]Richard B. Gaffin, Jr., notes on Philippians, *The NIV Study Bible,* ed. Kenneth Barker (Grand Rapids, Mich.: Zondervan Publishing House, 1985), 1804. [18]*The Analytical Greek Lexicon* (London: Samuel Bagster & Sons, Ltd., 1971), 433-34. [19]Charles R. Swindoll, *Laugh Again* (Dallas: Word Publishing, 1992), 72. [20]*Analytical Greek Lexicon*, 6; Malone, 47.